**<u>O.S.No.51/2020</u>**

<u>பி.வா.சா.1, திருமதி.முத்துலெட்சுமி</u>
நாள் : 07.08.2025 நேரம் : 12.43 PM

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்</u>**

1)வாதிகள் மற்றும் 1,2 பிரதிவாதிகள் தான் முத்தம்மாளின் வாரிசுகள் என்றால் சரிதான். தாவா சொத்து ஆதியில் முத்தம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி முத்தம்மாளின் பெயரில் தான் தாவா சொத்திற்கு பட்டா எண். 722, 368 தாக்கலாகி வருகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணமான பட்டா எண். 722 வில் சர்வே எண்கள்.195/5 ஏ, 195/5 பி அடங்கியுள்ளது என்றால் எனக்கு சர்வே எண்கள் தெரியாது. மேற்படி சர்வே எண்.195/5 ஏல் உள்ள சொத்து முத்தம்மாளின் உடன் பிறந்த சகோதரியான லட்சுமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் எனக்கு படிக்க தெரியாது, அதனால் சர்வே எண் தெரியாததால் அது பற்றி எனக்கு தெரியாது. மொத்த சொத்துக்களில் பாகம் லட்சுமிக்கு ஒதுக்கப்பட்டது என்றால் மொத்தமாக லட்சுமிக்கு கொடுத்துவிட்டார்கள்.

2)சர்வே எண்.195/5 பி என்பது தாவா 2 வது லக்க சொத்து என்றாலும், அது முத்தம்மாளின் வாரிசுகளான வாதி மற்றும் 1,2 பிரதிவாதிகளுக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. முத்தம்மாளின் வாரிசுகளுக்கு தான் தாவா 2 வது லக்க சொத்து பாத்தியம் என்றாலும், அவர்களுக்கு பாத்தியம் இல்லை என வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. தாவா சொத்துக்களை வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் முத்தம்மாளின் காலத்திற்கு பின்னர் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை முத்தம்மாளின் வாரிசுகளான வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் விவசாயம் செய்வதற்காக வாரத்திற்கு விட்டிருந்தார்கள் என்றால் சரியல்ல.

3)பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் தாவா சொத்துக்களில் வாதிகளும், 1,2 பிரதிவாதிகளும் தாயாரான முத்தம்மாளும், லட்சுமி வகையறாவும் அனுபவத்தில்

இருந்ததாகவும், குமரவேல் மனைவி முத்துலட்சுமி சாகுபடி செய்து வருகிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதால் நான் தாவா சொத்துக்களை வாரத்திற்கு தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் 2016 முதல் 2020ம் ஆண்டு வரை முத்தம்மாள் மற்றும் லட்சுமி வகையறாவுக்கு பாத்தியப்பட்ட சொத்தை முத்துலட்சுமி உழவடை செய்து வருகிறார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் உழவடை செய்வதை மறைத்து தாவா சொத்துக்களில் எனக்கு பாத்தியம் இருப்பதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4)நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 9வது பத்தியில் தாவா சொத்துக்கள் முத்தம்மாளுக்கு பாத்தியம் என்றும், அவருக்கு பின்னர் வாதி, 1,2 பிரதிவாதிகளுக்கு பாத்தியமடைந்து அனுபவம் செய்து வந்தனர் என்றும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்து வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் அதை 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுக்க எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் 16வது பத்தியில் 3ம் பிரதிவாதி குமரவேலுக்கு எழுதி கொடுத்த பத்திரத்தில் தாவா சொத்துக்களை தவிர வேறு சொத்துக்களையும் சேர்த்து எழுதி கொடுத்துள்ளதால் மேற்படி ஆவணத்தை முழுவதுமாக என கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது அல்ல என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5)பி.வா.சா.ஆ.2 ஆவணத்தை எனது கணவர் கிரையம் பெற்றுள்ளார் என்றாலும், தாவா 2வது லக்க சொத்தை கிரையம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. மொத்தமாகத் தான் வாங்கினார். தாவா 2வது லக்க சொத்தை நான் கிரையம் பெற்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட 1வது லக்க சொத்தை கிரையம் பெற்றுவிட்ட 2வது லக்க சொத்தையும் சேர்த்து கிரையம் பெற்றதாக மேற்படி 2வது லக்க சொத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் வழக்கு நடத்துகிறேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணம் வேறு சொத்துகளுக்கு உரியது என்றால் சரியல்ல.

6)பி.வா.சா.ஆ.1 ல் கண்ட சொத்துக்கள் பாகம் பிரிக்கப்படாத நிலையில் 1,2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணம் செல்லத்தக்கது அல்ல என்றாலும், மேற்படி கிரைய ஆவணத்தின் மூலம் எனக்கு எந்த உரிமையும் கிடைக்க கூடியது அல்ல என்றாலும் சரியல்ல. அதேபோல் பி.வா.சா.ஆ.2 ஆவணம் பாகம் பிரிக்கப்படாத நிலையில் கிரையம் பெறப்பட்டதால் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் 10வது பத்தியில் 3ம் பிரதிவாதி தனித்த அனுபவத்தில் பட்டா பெற்று வரி வகையறா செலுத்தி வருகிறார் என்று நான் குறிப்பிட்டுள்ளது தவறு என்றாலும் மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

7)நான் மேற்படி பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். நான் மேற்படி பட்டாவை தாக்கல் செய்துள்ளேன் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி மோசடி கிரைய ஆவணமான பி.வா.சா.ஆ.2–ல் 3ம் பிரதிவாதியின் பெயரில் உள்ள பட்டா இணைக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு தாவா சொத்துக்களில் எந்த பாத்தியமோ, அனுபவமோ இல்லாததால் தான் பட்டா எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாவா சொத்துக்களை வாரத்திற்கு எடுத்து வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும் பங்கு கொடுக்காததால் தான் அவர்கள் கேட்ட போது நான் 2020ம் ஆண்டு பிப்ரவரி மாதம் வாரம் கொடுக்காமல் தாவா சொத்துக்களை கிரையம் பெற்றதாக கூறியதன் பேரில் வாதிகள் 04.11.2020ல் நகல் எடுத்து பார்த்தபோது தான் 3ம் பிரதிவாதி குமரவேலுக்கு 20.09.2006ல் கிரையம் கொடுத்த விவரம் தெரிய வந்தது என்றும், 24.11.2020ல் நகல் எடுத்து பார்த்தபோது தான் 3ம் பிரதிவாதி குமரவேலுக்கு 19.02.1991ல் கிரையம் கொடுத்த விவரம் தெரிய வந்தது என்றால் சரியல்ல.

8)தாவா சொத்துக்களை குமரவேல் இறந்த பிறகு இந்த வாதிகளுக்கும், 1,2 பிரதிவாதிகளுக்கும், 5,6 பிரதிவாதிகள் வாரம் கொடுத்து வந்தார்கள் என்றால்

சரியல்ல. பி.வா.சா.ஆ 1 மற்றும் பி.வா.சா.ஆ 2 ஆவணங்கள் பெயரளவில் ஏற்பட்ட ஆவணங்கள் என்றாலும், ஊர்ஜிதத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல. நான் வாதிகள் தவறாக நீதிமன்ற கட்டணம் கட்டியிருப்பதாக குறிப்பிடப்பட்டிருப்பது தவறு என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் எனது கணவர் குமரவேலின் பெயரில் உள்ள பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9)பி.வா.சாஆ.1 ,2 ஆவணங்கள் பெயரளவில் ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால் தான் பட்டா மாற்ற எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. 3 ம் பிரதிவாதி கிரையம் பெற்ற தேதியிலிருந்து எனது கணவர் பெயரில் எந்த பயிர் காப்பீடு ரசீதும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி எனது கணவர் பெயரில் உள்ள வருவாய் ஆவணங்களோ, ரசீதுகளோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களின் நான்கு மால் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு சர்வே எண் படிக்கத் தெரியாததால் என்னால் 2 லக்க சொத்துக்களுக்கும் தனித்தனியாக நான்கு மால் சொல்ல தெரியாது. வாதிகள் சரியான நான்குமாலை குறிப்பிட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. வியாஜ்ஜியமூலம் சரியாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் வாதிகளின் பாகத்தை பிரித்து கொடுக்க நான் கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

10)எனது கணவர் குமரவேலுக்கு நானும், எனது மகன்களான கதிரேசனும், முருகனும் தான் வாரிசுகள் என்றால் சரிதான். எனக்கு ஒரு மகள் உள்ளார். அவர் பெயர் ரஜ்ஜிதா. எனக்கு ஒரு மகள் இருப்பதை நான் எதிர் வழக்குரையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் எனது கணவர் இறப்பிற்கு பின்னர் எப்படி எனது பெயருக்கு மட்டும் பட்டா மாற்றம் ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டா மாறுதலின் போது முத்தம்மாளின் வாரிசுகளுக்கு அறிவிப்பு அனுப்பபடவில்லை என்றால் சரியல்ல. மேற்படி பி.வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக ஏற்பட்ட ஆவணம் என்றால்

சரியல்ல. அந்த ஆவணத்தின் படி நான் தாவா சொத்துக்களில் எந்த உரிமையும் கோர முடியாது என்றால் சரியல்ல. பிராது படி தீர்ப்பாவதற்கு எனக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்றால் சரியல்ல.

விசாரணை முடிவுற்ற நேரம்: 01.45 PM

APARNA JUDIT CHARLES

Digitally signed by APARNA JUDIT CHARLES
Date: 2025.08.07 10:19:19 +0530